## த.வெ.க.வை தானே அம்பலப்படுத்திக்கொண்ட த.வெ.க.:

# வெள்ளை அறிக்கை பொய் என்பதை நிரூபித்த பட்ஜெட்!

## த.வெ.க. வெள்ளை அறிக்கை vs த.வெ.க. பட்ஜெட் 2026 – 27 ஓர் ஒப்பீடு!

### தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!




**சென்னை,ஆக.8-**

**சமீபத்தில் தவெக அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கைக்கும், அவர்கள் தாக்கல் செய்த 2026-27 ஆம் ஆண்டிற்கான முதல் பட்ஜெட்டிற்கும் இடையே உள்ள நிதி முரண்பாடுகள்:**

#### 1. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR)

முந்தைய தி.மு.க. அரசின் இடைக் கால பட்ஜெட்டில், மாநில வரி வருவாய் 19% அதிகரிக்கும் என்றும், அது ரூ.2,29,579 கோடியாக இருக்கும் என்றும் கூறப்பட்டிருந்தது.

இது மிகவும் சாத்தியமற்றது என்றும், உண்மையில் 8% (ரூ.2,08,000 கோடி) மட்டுமே வரி வருவாய் வளரும் என்றும் த.வெ.க. தனது வெள்ளை அறிக்கையில் கடுமையாக விமர்சித்தது.

ஆனால், தற்போதைய த.வெ.க. பட்ஜெட்டில், தங்களின் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக வரி வருவாய் 17.79% அதிகரிக்கும் (ரூ.2,26,740 கோடி) என்று கணக்குக் காட்டியுள்ளனர்.

திமுக கணித்த 19% வருவாய் வளர்ச்சி இலக்கு சாத்தியம் தான் என்பதை த.வெ.க. அரசு தனது சொந்த பட்ஜெட் மூலமாகவே மறைமுகமாக ஒப்புக் கொண்டுள்ளது.

#### 2. மொத்த வருவாய் வரவுகள் (TRR)

திமுக பட்ஜெட்டில் மொத்த வருமானம் ரூ.3,44,575 கோடியாகக் கணிக்கப்பட்டிருந்தது மிகைப்படுத்தப்பட்ட கணக்கு என்றும், உண்மையான வருமானம் ரூ.3,30,575 கோடியாக மட்டுமே இருக்கும் என்றும் வெள்ளை அறிக்கை குறை கூறியது.

ஆனால், த.வெ.க.வின் புதிய பட்ஜெட்டில் மொத்த வருமானம் ரூ.3,50,027 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.


தி.மு.க. காட்டிய வருமானமே மிக அதிகம் என்று விமர்சித்த த.வெ.க., அவர்களை விட ரூ.5,452 கோடி கூடுதலாக வருமானம் வரும் என்று தற்போதைய பட்ஜெட்டில் காட்டியுள்ளது என்றால் அது எவ்வாறு வரும்? மக்கள் மீதான வரி சுமையை மேலும் அதிகரிக்க போகிறதா?

#### 3. வருவாய் பற்றாக்குறை (Revenue Deficit)

தி.மு.க. பட்ஜெட்டில் ரூ.48,696 கோடி வருவாய் பற்றாக்குறை என்று காட்டப்பட்டதை மறுத்த வெள்ளை அறிக்கை, அவர்கள் பல செலவுகளை மறைத்துவிட்டதாகவும், உண்மையான பற்றாக்குறை சுமார் ரூ.90,500 கோடியாக இருக்கும் என்றும் கூறியது.

ஆனால், தற்போதைய த.வெ.க. பட்ஜெட்டில் மொத்த வருவாய் பற்றாக்குறை ரூ.55,775 கோடியாக மட்டுமே காட்டப்பட்டுள்ளது.

வெள்ளை அறிக்கை கூறிய பற்றாக்குறையில், சுமார் ரூ.34,725 கோடி தற்போதைய பட்ஜெட்டில் திடீரென எப்படிக் குறைந்தது அல்லது எங்கே மறைக்கப்பட்டது என்ற கேள்வி எழுகிறது.




#### 4. மூலதனச் செலவினம் (Capital Expenditure)

மாநிலத்தின் உள்கட்டமைப்புக்காக தி.மு.க. அரசு ஒதுக்கிய ரூ.59,562 கோடி மிகவும் குறைவானது என்றும், இது தவறான அணுகுமுறை என்றும் வெள்ளை அறிக்கை கூறியது.

ஆனால், த.வெ.க. அரசின் பட்ஜெட்டில் உள்கட்டமைப்புக்காக ரூ.56,985 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. ஒதுக்கிய நிதியே மிகக் குறைவு என்று குற்றம் சாட்டியவர்கள், தற்போதைய பட்ஜெட்டில் அதைவிட ரூ.2,577 கோடியைக் குறைத்து ஒதுக்கியுள்ளது மிகப்பெரிய முரண்பாடாகும்.

இந்தத் தரவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, த.வெ.க. அரசு தங்களது வெள்ளை அறிக்கையை மாநிலத்தின் உண்மையான நிதி நிலையைக் காட்டும் ஆவணமாகப் பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. மாறாக, அது உண்மையான தரவுகளைத் தருவதற்குப் பதிலாக, முந்தைய தி.மு.க. அரசின் மீது குற்றம் சுமத்துவதற்கான ஒரு அரசியல் குற்றப்பத்திரிகையாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.










## லால்குடி ரயில் நிலைய மேம்பாட்டிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

### மக்களவையில் – அருண் நேரு கேள்வி!

புதுடெல்லி, ஆக.8-

பெரம்பலூர் மக்களவை உறுப்பினர் அருண் நேரு, லால்குடி ரயில் நிலைய மறுசீரமைப்பு குறித்து நாடாளு மன்றத்தில் கேள்வி எழுப்பினார்.



பெரம்பலூர் நாடாளு மன்ற உறுப்பினர் அருண் நேரு,

அமிர்த் பாரத் நிலைய திட்டத்தின் கீழ் கடந்த 3 ஆண்டுகளில் நடைபெற்ற பணிகள், ஒதுக்கப்பட்ட நிதி, பயணிகள் வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் மற்றும் லால்குடி நிலையத்திற்கான பேருந்து இணைப்பு, ஆட்டோ கட்டணம் குறித்து எழுத்துப்பூர்வமாக விளக்கம் கேட்டார்.

இதற்கு பதிலளித்த ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், லால்குடி நிலையத்தில் நுழைவு வளைவு, நடைமேடை மேம்பாடு, கழிப்பறை, அடையாள பலகைகள் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும், நிலைய கட்டிடம், வெயிட்டிங் ஹால், விளக்கு, அணுகு சாலை பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 77 ரயில் நிலையங்கள் அமிர்த் பாரத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் லால்குடியும் ஒன்று என்றும் கூறினார். கடந்த 3 ஆண்டுகளில் தமிழகத்திற்கு ரூ.5,931 கோடி ஒதுக்கப்பட்டு, ரூ.5,198 கோடி செலவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றியம் பேரூர் கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன் தலைமையில் பேரூர் கழக செயலாளர் பி.ஏ.நஜ்முதீன் முன்னிலையில் நிர்வாகிகள் சுப.தமிழரசன், காளிமுத்து, மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் முருகானந்தம் உட்பட நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### தமிழ்நாட்டில் தனியார் போட்டித் தேர்வு

## பயிற்சி மையங்களை ஒழுங்குபடுத்துவது குறித்து எடுத்த நடவடிக்கை என்ன?

### மக்களவையில் – ஆ.மணி எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, ஆக.8-

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையங்களின் செயல்பாடு மற்றும் அவற்றை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா?

மேலும், பயிற்சி மையங்களில் வசூலிக்கப்படும் கட்டணங்களில் வெளிப்படைத்தன்மை, கற்பித்தலின் தரம், மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நிர்வாகப் பொறுப்புணர்வை உறுதி செய்ய ஒன்றிய அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கம் கோரியுள்ளார்.



அதேபோல், தமிழகத்தின் கிராமப்புறங்கள் மற்றும் கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், குறிப்பாக தர்மபுரி மாவட்ட மாணவர்கள், தரமான மற்றும் மலிவு கட்டணத்தில் போட்டித் தேர்வு பயிற்சி பெறும் வகையில், டிஜிட்டல் கற்றல் தளங்கள், பள்ளி அடிப்படையிலான வழிகாட்டுதல் மற்றும் அரசு ஆதரவுடன் செயல்படும் பயிற்சி திட்டங்களை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளதா என்றும், அவ்வாறு இருந்தால் அதன் விவரங்களை தெரிவிக்குமாறும்,

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகத்தில் செயல்படும் தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் தொடர்பாக அதிகப்படியான கல்விச் சுமை, தவறாக வழிநடத்தும் விளம்பரங்கள், முறைகேடான செயல்பாடுகள், மாணவர் நலனில் குறைபாடுகள் உள்ளிட்ட புகார்கள் பெறப்பட்டுள்ளனவா என்றும், அவ்வாறு பெறப்பட்டிருந்தால் அவற்றின் விவரங்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விளக்கம் அளிக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் (EWS), பட்டியலினத்தவர் (SC), பழங்குடியினர் (ST) மற்றும் பிற பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் தரமான போட்டித் தேர்வு பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டுதலை சமமான முறையில் பெறுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு இதுவரை மேற்கொண்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஒன்றிய கல்வி அமைச்சர் சுகந்தா மஜும்தாரிடம் மக்களவையில் ஆ.மணி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.



சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அண்ணா மன்றத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் ஒன்றியச் செயலாளர்கள் பூமணி, கோபாலசுப்பிரமணியன், பேரூர் கழகச் செயலாளர் கதிர்வேல், பொதுக்குழு உறுப்பினர்கள் சோமசுந்தரம், அம்பலமுத்து, துணைச் செயலாளர் சிவபுரிசேகர் அலாவுதீன்யாகூப் மற்றும் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.